Rm. Kr.

உ

ஸ்ரீபாலதெண்டாயுதபாணி

ஆசிரியவிருத்தம்.



என். கணபதி முதலியார்,

20, அருணாஜலமுதலி தெருவு, மதராஸ்.

இதன் விலை] 1946. [அணா 1.

உ

கணபதி துணை

தஞ்சை வடக்கு வாயல்

ஸ்ரீ பால

தெண்டாயுதபாணி

ஆசிரிய விருத்தம்

சீர்பெற்ற மூஷிகவா கனமீதினில் யேரிவந்தென்
முன்னே சிங்கார சோதிமின்ன
பார்வதியும் பரமனும் முருகனொடு வானவர்
ரிஷி முனிவர் சித்தரின்னங்
கார்மேக வண்ணனும் கஞ்சநும் ஜயஜயா
கணபதி துணையெனவும்
பேர்பெற்ற தேவாயென் சிந்தையில் விளையாடும்
சுந்தர கணேச குருவே.

வாழ்கின்ற தஞ்சைநகர் வாழையடி வாழையாய்
வாழ்ந்திடும் வடக்குவாயல்
வரிசையாய் கடைகளும் வண்டிகள் நிற்கும்
வர்ணநதி போகும் சாலை

வணங்கினேன் கரிமுகனை வாழ்ந்திடும் ஆஞ்சநேயா
வரிசையாய் யானும் கண்டேன்
வாலபிருயமும் எதிரிட்ட பார்வையும்
வள்ளி தெய்வானை கண்டேன்
வர்ணமயிலேரியே வடிவேல் பிடித்துமே
வரமது தரவும் கண்டேன்
வெள்ளிமலை யோகனே பழனிமலை வாசனே
வாழ்கின்ற வாலை மகனே
வண்மையுடன் அடியேன் நினைத்தவரம் தருவாய்
வள்ளி தெய்வானை யுடனே
வாலவயதா யுனது வளர்தஞ்சை பதிவாழும்
பால தெண்டாயுத பாணிபோற்றி.

மந்திரம் செய்பவர்கள் உன்னைநினையாவிட்டால்
மாரணம் செய்பவனும் நீ
தந்திரம் செய்பவர்கள் உன்னை நினையாவிட்டால்
தாரணம் செய்பவனும் நீ
ஓம் சரஹணபவஎன்று அட்சரம் அடக்கயில்
உயிரெழுத் தானவனும் நீ
ஒன்பது சக்கரம் ஐம்பத்தோர் அட்சரத்தில்
உயிரெழுத் தானவனும் நீ
மயான ருத்திரன் மாமுண்டி ருயனையும்
மரித்து அடிப்பவனும் நீ

மலையாள பகவதியும் தகதகவென வருகையில்
மாயமாய் சொல்பவனும் நீ
பாலன் வருந்துகிறேன் ஓலமிட் டழுகிறேன்
பதறியே வேலெடுத்து
பளபளென மயிலேறி வள்ளிதெய் வானையுடன்
வருகுவாய் பாலதெண்டாயுத பாணிபோற்றி.

தாயில்லை தந்தையும் தமயனு மில்லையே
தற்கார்க்க வொருவரில்லை
தைரியம் சொல்லவும் மனிதரு மில்லையே
தணிகாசலக் கடவுளே
மாமனும் மாமியும் மைத்துன ரில்லையே
மாளாத வுறவுமில்லை
உற்றாறும் பெற்றாறும் உறமுறையா ரில்லையே
ஒருபய னடைந்ததில்லை
அண்டவு நிழலில்லை ஒண்டவும் இடமில்லை
அப்பனே கந்தவேலா
சண்டனும் வந்திப்போ கண்டனை செய்குறான்
சண்முகா உனக்கபயம்
பாலன் வருந்துகிறேன் ஓலமிட் டழுகிறேன்
பதறியே வேலெடுத்து
பளபளென மயிலேறி வள்ளிதெய் வானையுடன்
வருகுவாய் பாலதெண்டாயுத பாணிபோற்றி.

வேலாயுதம் வொருகை சூலாயுதம் வொருகை
விரிச்சந்திர பாணம் வொருகை
வெற்றிவேல் மகாமந்திர வாளொருகை
வீரகன் நாலாயிரம் பெருக
சூரியப் பிரகாசமாய் சுந்தர மாகவே
சுத்தவெளி முகங்கள் ஆறும்
நவரத்ன மாலையும் கவசகுண் டலமுடன்
நற்சிங்கார ரூபமும்
சூலாயுதம் பெருக சுயரூப மாய்வந்த
சோமசுந்தரப் பொருளே
சூதாக சுனையில் கிழவனாய் நின்றதொரு
சிவசுப்ரமணியக் கடவுளே
பாலன் வருந்துகிறேன் ஓலமிட் டழுகிறேன்
பதரியே வேலெடுத்து
பளபளென மயிலேறி வள்ளிதெய் வானையுடன்
வருகுவாய் பாலதெண் டாயுத பாணிபோற்றி.

செந்திமாலை

சதாசிவத்தில் உதித்தெழுந்த ஜோதியாச்சு
சங்கரனார் ஈன்றெடுத்த குழந்தையாச்சு
வீரமலை வீராளிமலை வேலுமாச்சு
வேதாந்தம் சித்தாந்தம் குடைகளாச்சு

மண்டலங்கள் நிறைந்திருக்கும் மயிலுமாச்சு
மன்னர் மன்னர் சூழ்ந்திருக்கும் படையுமாச்சு
காலனோ டெதிர்த்துநிற்கும் கடம்பனாச்சு
கந்தரிடம் அண்டிருக்கும் இடும்பனாச்சு.

ஆறுமுக மானபொருள் நீர்தானாகும்
அகண்டபரி பூரணமும் நீர்தானாகும்
ஐம்பத்தோர் அக்ஷரமும் நீர்தானாகும்
ஐந்தெழுத்தின் உயிரெழுத்து நீர்தானாகும்
அசுரனை வென்றவனும் நீர்தானாகும்
ஐந்தெழுத்தின் சுழிமுனையில் நீர்தானாகும்
வள்ளிதெய் வானையுடன் மயிலுமேறி
வரவேணும் தெண்டாயுத பாணிபோற்றி.

ஓமென்ற சக்கரமும் நீர்தானாகும்
ஓங்கார ரீங்கார நீர்தானாகும்
சௌமென்ற அக்ஷரமும் நீர்தானாகும்
சண்முகமாய் நின்றவரும் நீர்தானாகும்
கிலியுமென்ற அக்ஷரமும் நீர்தானாகும்
கிழவனாய் நின்றவரும் நீர்தானாகும்
வள்ளிதெய் வானையுடன் மயிலுமேறி
வரவேணும் தெண்டாயுத பாணிபோற்றி.

அமணர்குலம் வேரறுத்த கையுமெங்கே
ஆறுமுகம் பன்னிருகை வேலுமெங்கே

தருணத்தில் ஓடிவரும் இடும்பனெங்கே
உன்சந்நிதியில் இருக்கின்ற கபடனெங்கே
வேகமதாய் ஓடிவரு மயிலுமெங்கே
விதமான சங்குமணி நாதமெங்கே
வள்ளிதெய் வானையுடன் மயிலுமேரி
வரவேணும் தெண்டாயுத பாணிபோற்றி.

சிங்கார மாகவுன் சென்னிதனில் மகுடமும்
செவியினில் குண்டலமும் மின்ன
சீலமுடனே உனது நெற்றியில் திலகமும்
திருநீற்று காப்பு மின்ன
செங்கையில் வேலாயுதம் தங்கு ருத்திராக்ஷகெண்டி
ஜெயமாலை ஜோதிமின்ன
ஜெயவீர புஜமதிலே நயமான முத்துமணி
திறண்டவடி வர்க்கமின்ன
மேனியில் ஆபரண அழகுமுன் பாதரட்சையும்
அசையுமுன் மேனிமின்ன
ஆடி அடியார்களுக் கனுகூலமாய் வந்து
அருள்புரியும் வாக்குமின்ன
எங்கும்புகழ் தங்கவே தஞ்சையில் வாழ்ந்திடும்
சிவசுப்ரமண்யக் கடவுளே.

தட்டு சல்லடங் கச்சைபட்டு பீதாம்பரம்
தலைபில் முண்டாசுவைத்து

தாளடியிலே சிலம்பாட கெண்டாமணி
தகதகனவே துலங்க
மட்டிலாபரணங்கள் பூட்டியே மார்பினில்
மகரகெண்டிகை ஜொலிக்க
மாணிக்க தடியிலிரு மலைகளை மாட்டியே
மண்டியே யிட்டேநடக்க
அஷ்டகஜம் வீரிட்டு தட்டு தடுமாரியே
அலரியே நடுங்கியோட
ஆடியே காவடியை தோளினியி லிருத்தியே
அன்புகொண்டே நடந்து
யெட்டியடி வைத்துநீர் யேகிநட மாடிவரும்
சிவசுப்ரமணியக் கடவுளே.

கதிர்காம ஆசிரிய விருத்தம்

ஆனைமுகவா யும்மை அனுதினம் நம்பினேன்
ஐங்கரன் ஓடி வருக
ஆறுமுக சுவாமியின் பேரில் கதைபாட
அன்புடனே ஓடி வருக
சதுர்மறை பிர்மனும் அன்னவா கனமேரி
சரஸ்வதியுடன் வருக வருக
பரமனும் பார்வதி ரிஷபவா கனமேரி
பண்புடனே வருக வருக

சேஷசயனத்தில் ரெங்கரும் அலமேலு மங்கையும்
சீக்கிரம் வருக வருக
தசரதர் புத்திரர் ஸ்ரீராமர் லக்ஷ்மணர்
சீதையுடன் வருக வருக
கருடவாகன மேறும் ருதா ருக்மணியுடன்
கிருஷ்ணனும் வருக வருக
சிங்கவா கனமேறும் சிங்களர்ச்சி அம்மனும்
க்ஷணத்தில் வருக வருக
புஷ்ப சிவிகையின் மீதினில் விளங்கும்
அம்மிலூர் மாரியும் அருகினில் வருக வருக
அக்கினி பாணத்தை அதரவே பொடிசெய்யும்
அன்னை காமாக்ஷி வருக வருக
அஷ்டதிக் கிலுள்ள துஷ்டர்களை அதம்செய்யும்
அங்காளம்மன் வருக வருக
முப்பத்து முக்கோடி தேவர்கள் முனிவர்கள்
என்முன்னமே வருக வருக
நாற்பத் தெண்ணாயிரம் ரிஷிகளும் முனிவர்கள்
நடனப் பெண்ணுடி வருக வருக
எமதர்ம ராஜனும் எருதுமே லேறியே
யென்முன்னே வருக வருக
ஆனைவா கனமேறும் ஐயனார் முனிவரும்
ஆடியோ வருக வருக
இத்தனை பேர்களும் இங்குவந் திருக்கையில்
யேன் ஆறுமுகம் வரவேயில்லை

எங்கேயோ ஞாபகம் எவ்விடத்தில் சிந்தையோ
யென்மேல் மனஸ் தாபமோதான்
நாலைந்து வருஷமாய் நித்திரை யில்லையே
நாதனைப் பார்க்க வேண்டி
அன்னம் புசிக்கலே தண்ணீர் குடிக்கலே
நற்சுகம் பெறவே யில்லை
வருகிறார் வருகிறார் வருகிறார்
வர்ண மயிலேறி கந்தன்
சங்கு நாதங்களும் யெங்கேயோ
சண்முகம் வருவதாக
காலினில் கெண்டயம் கலகலென தண்டயம்
கனகமணி சத்தத்தோடு
காவிபுரிந்து சடைகவச குண்டல மணிந்து
கான மயிலேறி கந்தன்
கடம்பனொரு காவடி இடும்பனொரு காவடி
காணாத லக்ஷம் கோடி
கண்டவர்கள் பாடவும் கைகொட்டி ஆடவும்
கந்தவேல் நின்றாடவும்
கடம்பா வனத்தை அதம்செய்த ஐயனே
கதிர்வேலெடுத்து நீரும்
கடகடென மயிலேறி வள்ளிதெய் வானையுடன்
வருகுவாய் கதிர்காமவேல் முருகனே.

பழனி வேலவர் பேரில்

பனிரெண்டு கைவேல் ஆசிரிய விருத்தம்

சிரசு தனில் கிரீடியும் சிங்கார தோள்களும்
சிருமணிகள் கழுத்தினழகும்
திருநீற்று நெற்றியும் சிறந்த பூணூல்களும்
சிங்கார இடையினழகும்
பன்னிரு கையில் ஆயுதம் சொல்லவே
பாலநான் ஓடிவந்தேன்
வேலாயுதம் ஒருகை சூலாயுதம் ஒருகை
விருச்சந்திர சாட்டை யொருகை
கீதங்கள் பாடவே கிண்கிணி யொருகை
கேசவன் சங்கு வொருகை
சமணரை வதைத்திட்ட சக்கரம் வொருகை
சங்கரன் மாலும் வொருகை
மகமாயி பகவதி மகாதேவி பிடித்திட்ட
மந்திர மழுவும் வொருகை
வீராதி வீரரை வெல்லவே யெடுத்திட்ட
வேதாந்த வில்லும் வொருகை
அமணர் குலம் கருவை அருத்திட்ட
ஆங்கார அம்பு வொருகை
மகாதேவராஜனும் கண்டு திடுக்கிடுவார்
மந்திரவாளும் வொருகை

கணக்குடன் அட்சரம் ஜெபிக்கவே வந்திட்ட
　　கண்ரகோடாலி வொருகை
கார்த்திடும் ஈராறு கரத்தினில் அணிந்துநீ
　　கானமயிலேரி நின்று
பளபளென மயிலேரி வள்ளிதெய் வானையுடன்
　　வருகுவாய் பழனிமலை வேல்முருகனே.

மாலை

சீர்புகழும் யானைமுகன் செழித்து வாழ்க
　　சிறப்புடனே திருமாலும் மங்கை வாழ்க
வார்குழலாள் தெய்வானை வள்ளி வாழ்க
　　மணம்புணர்ந்த ஆறுமுகம் வடிவேல் வாழ்க
தார்புகழும் மேலமலை முருகர் வாழ்க
　　தமிழ்சொன்ன பிள்ளைகளும் தழைத்து வாழ்க
பார்புகழும் அன்னமொரு கோடிகளாகும்
　　பாரமலை ஆண்டவரே பழனிவேலு.

மூர்க்கமுள்ள ஆறுமுக வடிவுமாகி
　　முளைத்தெழுந்த சோதியைநான் காணவேண்டி
தீர்க்கமுள்ள மணிமார்பா அமரர்கோவே [வேண்டி
　　செங்கைவடி வேலவனே என்றும்சொன்னேன்

கார்க்கமன மிரங்கலேயோ அய்யாசுவாமி
கந்தனே என்மீதில் தயவுவைத்து
கார்க்கயினி வேணுமையா யேழைபங்கா
பாரமலே யாண்டவனே பழனிவேலு.

குயிலதுபோல் கூவுகிறேன் வாய்திறந்து
கொஞ்சும் நல்ல சடையாண்டி குழந்தைவேலு
வெயில்கண்ட மெழுகதுபோல் உருகுகின்றேன்
மேனியெங்கும் புண்ணாகி மெலிந்துவாடி
மயில்நடன மாடிவந்து யென்னைக்காரும்
மலேமுருகா செந்தில்வடி வேலாவுன்னை
பயிலது பண்ணாதே விடவுமாட்டேன்
பாரமலே யாண்டவனே பழனிவேலு.

தேடினேன் சிங்காரவேலா உந்தன்
திருமுகமும் பன்னிரெண்டு கையும்வேலும்
நாடினேன் மலேதோறும் சுற்றிவந்தேன்
நற்கமல ஆறுமுக பாதம்காண
ஆடினேன் ஆறுமுக வேலாவென்று
ஆண்டவரும் ருத்ராட்ச மாலேபூண்டு
நாடினேன் எனதுநலி தீருமையா
பாரமலே யாண்டவனே பழனிவேலு.

கால்கொண்ட தூரமெல்லாம் சுற்றிவந்தேன்
கதிர்வேலா யென்றுமனம் கருத்திலெண்ணி
வேல்கொண்டு மயிலேறி நடனமாடி
விளையாடி வோடிவந்து முருகாயென்னை
ஆள்கொண்டால் உனக்குவெகு பாரமுண்டோ
அடியேனால் ஆகாது பொறுக்கமாட்டேன்
பால்கொண்டு அபிஷேகம் செய்வேனையா
பாரமலை யாண்டவனே பழனிவேலு.

தங்கம்போல் ஒளிவான மேனியெங்கும்
தளதளப்பாய் வெண்ணீறும் தரித்துக்கொண்டு
அங்கமெங்கும் காவியினால் ஆடைகட்டி
அழகான ருத்ராட்ச மாலைபூண்டு
செங்காவி நிறமாக வருவார் எங்கள்
தேசிகனார் திருவடியை சேர்வதற்கு
தங்கம்போல் பாதமலர் பணிவேனையா
பாரமலை யாண்டவனே பழனிவேலு.

வாழ்கின்ற தஞ்சைநகர் வடபாலிலே
வட்டமதிலே வாழ்கின்ற அருணாஜலம் பிள்ளை
கணபதியை முன்னிட்டு கவிதனை நாட்டிடும்
கந்தவேல் பேரிலே தான்.

வித்தையும் ஜாலமும் வேடிக்கை பார்க்கவும்
வெகுபேர்கள் அறியவேணும்
வேலவன் பேரிலே வேடிக்கையாகவே
வெகுமுறையாய் பாடிவைத்தார்
தஞ்சைமா நகர்தனில் விஞ்சையுடன் வாழ்கின்ற
தாமோதரன் பெற்றமகனே
தகதகென மயிலேறி வள்ளி தெய்வானையுடன்
தட்சணம் வருகுவாயே [கிறேன்
வாடுகிறேன் தேடுகிறேன் வண்மையுடன் வணங்கு
வடிவேலெடுத்து நீரும்
வாலவய தாயுனது வளர்தஞ்சைப் பதிவாழும்
பாலதெண்டாயுத பாணி போற்றி.

முற்றிற்று.

Printed at the Sri Magal Vilasam Press, Madras.
19-4-46 C. 4000
Published by N. Ganapathy Mdr. P.I.C. MS. No. 3